3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதாவிற்கு பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.*

திரு. துரை சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய 174 முதல் 180 வரையிலான 7 அறிக்கைகளை குழுத் தலைவர் அவர்களின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.*

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009–2011 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டப் பேரவை மனுக்கள் குழுவின் 116 முதல் 119 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

“2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

2011 பிப்ரவரி 9]

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். அமைதியாக உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) உட்காருங்கள். என்ன திரு. மலரவன்?

திரு. தா. மலரவன்: இந்த சட்டத் திருத்தத்தை ஆரம்ப நிலையிலேயே அண்ணா தி.மு.க. எதிர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உங்கள் எதிர்ப்பை பதிவு செய்து விட்டோம். உட்காருங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011–2012 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியினுடைய கடைசி இடைநிலை அறிக்கை என்று சொல்வதைவிட, 5 ஆண்டு காலம் இந்த ஆட்சியினுடைய அவலங்களை எடுத்துச் சொல்கின்ற, இந்த ஆட்சியினுடைய மக்கள் விரோதச் செயல்களையும், இந்த ஆட்சியினுடைய தோல்விகளை ஒத்துக்கொள்கின்ற, மரணப் படுக்கையிலே இருக்கின்ற ஒரு மனிதனுடைய வாக்குமூலமாக இறுதி அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது.